மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் வைப்பதைப் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும் என்ற பதில் பொருத்தமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன். இனிமேல் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எதற்கும் என்னுடைய பெயரை வைக்க வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்.

83—

நன்னிலம் அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்.

21838–டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் பொது மருத்துவமனையில் தேவையான அடிப்படை வசதிகள், அவசர ஊர்தி (Ambulance) இல்லாதது குறித்து அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 40 படுக்கைகள் வசதி கொண்ட நன்னிலம் அரசு மருத்துவமனையில் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. அங்கு அவசர நோயாளி ஊர்தி வசதி செய்து தரப்படவில்லை.

(ஆ) 50 படுக்கைகள் வசதி கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கு மட்டுமே நோயாளி ஊர்தி வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வினாவிற்கு இடமில்லை.

97—

ஜல்லி உடைக்கும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயம் செய்தல்.

25754–டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஜல்லி உடைக்கும் சங்க தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1994 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஜல்லி உடைக்கும் சங்கத் தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) நீலகிரி, கூடலூர் தாலுகா, பாக்கனாவில், 26-9-1994 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) வேறு ஒரு பிரச்சினையை எடுக்கப் போகிறேன், உட்காருங்கள்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா, நெல்லியாளம்-2 கிராமம், பாக்கனா என்ற ஊரில் 26-9-94 அன்று நடந்த துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டுள்ள நிலையைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. எச். எம். ராஜு ஒரு அறிவிப்பை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். (குறுக்கீடு) இருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: நான் நேற்றே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே பொருள் பற்றி தாங்களும் அறிவிப்புக் கொடுப்பதாக திரு. கே. பி. ராஜு அவர்களும், திரு. சிங்காரம் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. எச். எம். ராஜு.